நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# அறுவடைக்குத் தயாராக இருந்த 5 ஆயிரம் வாழைகள் சேதம்

First Published : 26 Apr 2012 12:52:46 PM IST

பெ.நா.பாளையம், ஏப்.25: பெரியநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் புதன்கிழமை இரவு வீசிய பலத்த சூறாவளிக் காற்றுக்கு, அறுவடைக்குத் தயாராக இருந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்தன.

சூறாவளிக் காற்றுடன் மாலை 7 மணியளவில் பெய்யத் தொடங்கிய பலத்த மழையால், கோவனூர் மற்றும் கவுண்டம்பாளையம், தடாகம், வரப்பாளையம் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழைகள் அடியோடு சாய்ந்தன. கூடலூர் கவுண்டம்பாளையத்தில் ரங்கே கவுடர் தோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவருக்குச் சொந்தமான 1500 வாழைகளும், விஜயகுமார் என்பவரது தோட்டத்தில் 450 வாழைகளும், பிரிக்கால் தோட்டத்தில் 4500-க்கும் மேற்பட்ட வாழைகளும், வரப்பாளையம் சின்னத்தடாகம் பகுதிகளில் அறுவடைக்குத் தயாராக இருந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகளும், பாக்கு மரங்களும் சேதமாயின.

மேலும், பலத்த இடி காரணமாக வடமதுரை துணை மின் நிலையத்தில் டிரான்ஸ்ஃபார்மர் சாய்ந்தது. இதனால், இப் பகிர்மானத்துக்கு உள்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

பாலமலை மலையடிவாரம் பாரதி நகரைச் சேர்ந்த அருக்காணி என்பவரது குடிசை வீடு, சூறாவளிக் காற்றுக்கு கீழே சாய்ந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கிய அருக்காணியை பொதுமக்கள் காப்பாற்றினர்.

மேலும், பத்துக்கும் மேற்பட்ட வீடுகளின் ஓடுகள்,சிமெண்ட் ஓடுகள் தூக்கி எறியப்பட்டு உடைந்து நொறுங்கின.

புதுப்புதூர் செல்லும் வழியில் உள்ள லட்சுமி நகர் கருப்பராயன் கோவிலில் இருந்த 100 ஆண்டு கால வேப்ப மரம், மின் கம்பிகள் மீது முறிந்து விழுந்தது. இதனால், மின் கம்பிகள் அறுந்து தொங்கின.

மின்வாரிய ஊழியர்கள் விரைந்து வந்து மின் இணைப்பைத் துண்டித்தனர். இரவு முழுவதும் மழை பெய்ததால் பள்ளங்களில் மழை நீர் நிரம்பியது.

கவுண்டம்பாளையத்தில் இருந்து பாரதி நகர் செல்லும் புதிய சாலை மழை நீரால் அரிக்கப்பட்டு விட்டது. சூறாவளி மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பெ.நா.பாளையம் வட்டார வருவாய் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

## "திருந்திய நெல்சாகுபடி: 2 கிலோ விதை நெல்லில் 60 மூட்டை மகசூல் கிடைக்கும்'

First Published : 26 Apr 2012 11:45:00 AM IST

திருக்காட்டுப்பள்ளி, ஏப். 25: திருந்திய நெல் சாகுபடியின் மூலம் 2 கிலோ விதை நெல்லில் குறைந்தபட்சமாக சுமார் 60 மூட்டை நெல் மகசூல் கிடைக்கும் என்றார் வேளாண் விரிவாக்க இணை இயக்குநர் ஆர். முருகவேல்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், சோளம்கம்பட்டி ஊராட்சி பொன்விளைந்தான்பட்டி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் தமிழக அரசின் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் எம். யுவராஜ் தலைமை வகித்தார். விழாவை ஒன்றியக் குழு உறுப்பினர் ரவிமகாலட்சுமி தொடக்கிவைத்தார்.

உதவி வேளாண் அலுவலர்கள் ஜி. கோபிநாதன், ஆர். பெரியராஜ், ஆர். பழனிச்சாமி, அதிமுக கிளைச்செயலாளர் மாரனேரி ரவி, ஊராட்சி செயலாளர் அறிவுடைச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வேளாண் விரிவாக்க இணை இயக்குநர் முருகவேல் பேசியது: இந்த உழவர் பெருவிழாவின் குறிக்கோள், விளைச்சல் உற்பத்தியை 2 மடங்காகவும், வருவாயை 3 மடங்காகவும் விவசாயி பெற வேண்டும் என்பதுதான். சாதாரணமாக, ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 30 கிலோ விதை நெல் தேவை. இவை சுமார் 30 நாட்கள் வரை நாற்றாங்காலாக செயல்படும். இதன் மூலமாக சுமார் 40 மூட்டை மகசூல் வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், திருந்திய நெல் சாகுபடியில் சுமார் 2 கிலோ விதை நெல் போதுமானது. சுமார் 14 நாள்கள் மட்டுமே நாற்றாங்காலாக செயல்படும். இந்த நாற்றாங்காலுக்கு மேட்டுப்பாத்தி நாற்றாங்கல் என்று பெயர். இந்த நவீன முறை விவசாயம் மூலமாக குறைந்தபட்சமாக ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 60 மூட்டை (60 கிலோ) நெல் பெறலாம். திருந்திய நெல் சாகுபடி செயயும் விவசாயிகளுக்கு ரூ. 800 மதிப்பிலான களை எடுக்கும் கருவியும் அரசால் இலவசமாக வழங்கப்பட உள்ளது. மேலும், அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்கப்படும். இதன் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறலாம். மண் பரிசோதனை செய்து அதன் தன்மையை அறிந்து விவசாயம் செய்தால் மகசூல் அதிகம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மண் பரிசோதனை செய்ய 20 ரூபாய் செலுத்த வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு அகரப்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி, பூதலூர் உள்ளிட்ட வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள், ஆத்மா திட்ட அலுவலர்கள் ஆகியோரை அணுகலாம் என்றார் அவர்.

## நெல்லில் கூடுதல் லாபம் தரும் "பின்செய்நேர்த்தி"

First Published : 26 Apr 2012 10:40:00 AM IST

அரக்கோணம்: அறுவடை செய்த நெல்லை செய்நேர்த்தி செய்து விற்பதன் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என வேளாண் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

நெல்லுக்குக் கூடுதல் விலையைப் பெற்றுத் தருவது அதில் உள்ள முழு அரிசியின் அடிப்படையில் தான்.

பின்செய்நேர்த்தி செய்வதன் மூலம் நெல் அரவையின் போது 62 சதவீத அரிசி கிடைக்கிறது.

**அறுவடைக் காலம்**

நெல் ரகங்களின் வயதுக்கேற்றவாறு அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். கதிரில் நெல்மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறியிருந்தாலே போதுமானது.

இதனால் மணிகள் உதிர்வதைத் தடுக்கலாம். அறுவடையின் போது 19 முதல் 23 சதவீதம் வரை ஈரப்பதம் இருக்க வேண்டும்.

உதிர்ந்த நெல்மணிகளின் அரிசி கடுமையானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டும்.

**காய வைத்தல்**

அறுவடை செய்த நெல்லை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காயவைக்கக் கூடாது. காயவைத்த நெல்லில் ஈரப்பதம் 12 சதத்துக்குள் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதம் உள்ள நெல்மணிகளை சேமித்து வைத்தால் பூஞ்சாண வித்துகள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும்.

மூட்டைகளை அடுக்கி வைத்தல்

நெல்லை சுத்தமான சாக்குப்பைகளில் நிரப்ப வேண்டும். தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். நெல் மூட்டைகளை சுவரில் இருந்து ஒரு அடி இடைவெளிவிட்டு அடுக்கி வைத்தால் சுவரின் ஈரப்பதம் நெல்மணிகளைத் தாக்காது.

மருந்து தெளித்தல்

சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி என்கிற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும்.

தரம் பிரித்தல்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள வணிகமுறை தரப்பிரிப்பு மையங்களில் நெல்மணிகள் நான்கு ரகங்களாகப் பிரிக்கப்படுகின்றன. எனவே விற்பனைக்கு நெல்லைக்கொண்டு செல்லும்போது தர வாரியாகக் கொண்டுசெல்ல வேண்டும். பூச்சிகள் மற்றும் பூஞ்சாணத்தால் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப்போன் நெல்லை தனியாக பிரித்து விட வேண்டும்.

மேலே சொன்ன முறைகளை பின்பற்றி நெல் விற்பனையில் கூடுதல் வருவாய் பெறலாம் என வேலூர் மாவட்ட வேளாண் வணிகப் பிரிவு அலுவலர் கோ.சோமு தெரிவித்துள்ளார்.

## கறவை மாடுகளுக்கு தீவனம் அளிப்பது எப்படி?

First Published : 26 Apr 2012 10:39:05 AM IST

வேலூர்: கறவை மாடுகளுக்கு தீவனம் அளிக்கும்போது கவனிக்கவேண்டிய முறைகள் குறித்து வேலூரிலுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் கூறியது:

தீவனமானது எளிதில் செரிமானமடைவதோடு, உடல் பராமரிப்புக்கும், பால் உற்பத்திக்கும் பங்காற்றுவதற்காக சரி விகிதத்தில் கலந்திருக்க வேண்டும்.

கலவைத் தீவனம்

தீவனத்தில் பல்வேறுபட்ட தீவனப் பொருள்களைக் கொண்டு தயாரிப்பதன் மூலம் சுவையை அதிகப்படுத்துவது மட்டுமன்றி செலவையும் குறைக்கலாம்.

தீவனக் கலவையானது பூஞ்சை நச்சுக்கள், வண்டுகள் போன்றவைகளால் பாதிக்கப்படாமல் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

தீவனத்தை மாற்றக் கூடாது

ஏதாவது புதிய தீவனத்தை சேர்க்கும்போது தினமும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கவேண்டும். திடீரென தீவனத்தை மாற்றுவதை தவிர்க்கவேண்டும்.

பொதுவாக பண்ணையில் ஒரு குறிப்பிட்ட தீவன முறையை மட்டும் தினசரியாக கடைப்பிடிக்க வேண்டும்.

அதாவது முதல் கலப்புத் தீவனமும், பின் பசுந்தீவனமும், அதன் பின்னர் உலர் தீவனமும் கொடுக்கலாம். அடர் தீவனக் கலவையை ஊறவைத்து அல்லது அளவாக தண்ணீர் சேர்த்துக் கொடுக்கலாம்.

பசுந்தீவனம் செலவைக் குறைக்கிறது

பசுந்தீவனம் மற்றும் தட்டைகளை நறுக்கி சிறு துண்டுகளாக்கி கொடுப்பதன் மூலம் செறிமானத் திறன் அதிகமாவதோடு, தீவனம் வீணாவதைத் தவிர்க்கலாம்.

அடர் தீவன செலவு அதிகமாக இருப்பதால் பசுந்தீவனங்களை அதிகளவு அளிப்பதன் மூலம் அடர் தீவன தேவையைக் குறைக்கலாம். இதன் மூலம் உற்பத்தி செலவு குறைகிறது.

தாது உப்புக்கலவை அவசியம்

தீவனச் சேர்க்கைப் பொருள்களையும், தேவையான அளவு அதிகரிக்கவேண்டும்.

தாது உப்புக்கலவை முக்கியமாக தேவையான அளவு கொடுக்கவேண்டும்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**சோயா பயிரிடும் பரப்பளவு 10 சதவீதம் அதிகரிக்கும் - பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -**

ஏப்ரல் 27,2012,00:10



கடந்த ஆண்டு,சோயா பயிரிட்டதில், விவசாயிகள் சிறப்பான அளவில் வருவாய் ஈட்டியதால்,நடப்பு கரீப் பருவத்தில்,மேலும் அதிக அளவில் சோயா பயிரிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இதன்படி, சோயா பயிரிடும் பரப்பளவு, சாதனை அளவாக 8-10 சதவீதம் அதிகரித்து 1.02 கோடி ஹெக்டேராக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 93 லட்சம் ஹெக்டேரில்

சோயா பயிரிடப்பட்டது.நாட்டில், அதிக அளவில் சோயா உற்பத்தி செய்யும் மாநிலம் என்ற சிறப்பை மத்திய பிரதேசம் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில், சோயா விற்பனை வாயிலான லாபம் மிதமான அளவில் உள்ள போதிலும், நடப்பாண்டில் சோயா பயிரிடும் பரப்பளவு ஓரளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.தமிழ்நாடுஅதே சமயம், தமிழ்நாடு, மகாராஷ்ட்ரா,

ராஜஸ்தான், ஆந்திரா ஆகிய மாநிலங்களில், நடப்பு கரீப் பருவத்தில் சோயா பயிரிடும் பரப்பளவு அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.உற்பத்தி திறன்இதையடுத்து, ஒட்டுமொத்தமாக, நாட்டின் சோயா உற்பத்தி அதிகரித்து, உள்நாட்டு எண்ணெய் உற்பத்தி ஆலைகளுக்கு போதுமான அளவிற்கு எண்ணெய் வித்துக்கள் கிடைக்கும்.கடந்த சில
ஆண்டுகளாகவே, எண்ணெய் உற்பத்தி ஆலைகளுக்கு, போதுமான அளவிற்கு எண்ணெய் வித்துக்கள் கிடைக்காமல், அவற்றின் உற்பத்தி திறனுக்கும் குறைவாகவே இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.இந்நிலையில், சோயா உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில், எண்ணெய் ஆலைகளின் உற்பத்தி திறன், சிறப்பான அளவில் பயன்படுத்திக் கொள்ளப்படும். அதே சமயம், எண்ணெய் வித்துக்கள்
இறக்குமதியை பெரிதும் சார்ந்திருக்கும் நிலையும் தவிர்க்கப்படும் என,
எதிர்பார்க்கப்படுகிறது.இந்தியாவின் தாவர எண்ணெய் தேவையில், 55-60 சதவீதம் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்து
கொள்ளப்படுகிறது. குறிப்பாக, சோயா,சூரியகாந்தி மற்றும் இதர எண்ணெய் வகைகளில் கலப்பதற்காக, பாமாயில் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.இறக்குமதிஇந்த எண்ணெய் வகைகள், இந்தோனேஷியா, அர்ஜென்டினா, மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு, நாட்டின் ஒட்டுமொத்த சோயா உற்பத்தி 1 கோடி டன்னாக இருந்தது.பொதுவாக, ஜூன் - ஜூலை மாதங்களில் சோயா விதைப்பு பணிகள் நடைபெறும். அக்டோபர் முதல் டிசம்பர் வரை அறுவடை நடைபெறும்.

சோயா உற்பத்தியில் அமெரிக்கா முதலிடம்

கிழக்கு ஆசியாவை பூர்வீகமாக கொண்ட சோயா, கொழுப்பற்ற, புரதச் சத்துள்ள தானியமாகும்.உலகில் உற்பத்தியாகும் சோயாவில், 85 சதவீதம் சோயா எண்ணெய்க்காக அரைக்கப்படுகிறது.
இதன் மூலம் கிடைக்கும் புண்ணாக்கு, கால்நடை உணவுகள், நொறுக்குத் தீனிகள், புரத உணவுகள், சோயா பால் உள்ளிட்டவற்றை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. மேலும், சமையல் எண்ணெய், தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் எண்ணெய் வகைகளின் தயாரிப்பிலும் சோயா, குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டுள்ளது.சோயாவில், 40 சதவீதம் புரதம், 20 சதவீதம் எண்ணெய், 35 சதவீதம் மாவுப் பொருள், 5 சதவீத கனிம சத்து அடங்கியுள்ளன. சோயாவில் உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான எட்டு அமினோ அமிலங்கள் உள்ளன.உலகளவில் சோயா
உற்பத்தியில் 35 சதவீத பங்களிப்புடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடங்களில் பிரேசில் (27 சதவீதம்), அர்ஜென்டினா (19 சதவீதம்), சீனா (6 சதவீதம்), இந்தியா (4 சதவீதம்)

ஆகிய நாடுகள் உள்ளன. பராகுவே, பொலிவியா, கனடா நாடுகளும் சோயா உற்பத்தியில் வேகமாக முன்னேறி வருகின்றன.

## கடந்த நிதியாண்டில் 5.36 லட்சம் டன் பாக்கு உற்பத்தி

ஏப்ரல் 27,2012,00:04



கோழிக்கோடு: நாட்டின் பாக்கு உற்பத்தி, கடந்த 2010-11ம் நிதியாண்டில் 5.36 லட்சம் டன்னாக இருக்கும் என, கோழிக்கோடு பாக்கு மற்றும் நறுமணப் பொருள்கள் இயக்குனரகம் மதிப்பிட்டுள்ளது.இது, 4.1 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியாகும். இந்தியாவில், பாக்கு உற்பத்தியில் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது. மதிப்பீட்டு காலத்தில் கர்நாடகாவில் 1.95 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான பாக்கு மரங்களில் இருந்து, 2.58 லட்சம் டன் பாக்கு உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 1998-99ம் ஆண்டு முதல், பாக்கு பயிரிடும் பரப்பளவு 40 சதவீதம் உயர்ந்துள்ளது. இதில், கர்நாடகாவில் மட்டும் 70 சதவீத அளவிற்கு பரப்பளவு அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர், பாக்கு உற்பத்தியில், கேரளா, அசாம் ஆகிய மாநிலங்களே சிறந்து விளங்கின. தற்போது, மேலும் பல மாநிலங்களில் பாக்கு விவசாயம் பரவலாக வளர்ச்சி பெற்று வருகிறது. சுவை கூட்டப்பட்ட சுபாரி தயாரிப்பில், பாக்கு அதிக அளவில்
பயன்படுத்தப்படுகிறது. பிற வகைகளில் வர்த்தக ரீதியிலான பயன்பாடு மிக குறைவாகவே உள்ளது. இதுவே இத்துறைக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.பாக்கு அடிப்படையிலான கலப்பு
பயிர்களை உருவாக்கும் பட்சத்தில், பாக்கு விலை சரிவால் ஏற்படும் பாதிப்பு குறையும் என, இத்துறையினர் தெரிவித்துள்ளனர். பாக்கு விலையில் காணப்படும் அபரிமிதமான ஏற்றத்தாழ்வு, நோய் தாக்குதல், குறிப்பாக அழுகும் நோய் மற்றும் மஞ்சள் இலை நோய் ஆகியவை தான் பாக்கு வேளாண்மைக்கு பிரச்னையாக உள்ளன.

## எள் வரத்து குறைந்து கிலோ ரூ. 10 உயர்வு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2012,02:56 IST

கருத்தை பதிவு செய்ய

கவுந்தப்பாடி: கவுந்தப்பாடி வாரச் சந்தைக்கு எள் வரத்து குறைந்ததால் கிலோவுக்கு, 10 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

கவுந்தப்பாடி சுற்று வட்டாரப் பகுதியில் நஞ்செய் பயிர் அறுவடைக்கு பின், தண்ணீர் பற்றாக்குறையான காலங்களில், மூன்று மாத புஞ்சை பயிரான எள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மாரப்பம்பாளையம், பெருமாம்பாளையம், பாண்டியம்பாளையம், வேலம்பாளையம், குருச்சான்வலசு, சேவானூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் எள் சாகுபடி செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்ட அளவில் மைலம்பாடி, அந்தியூர் மற்றும் பூதப்பாடிக்கு அடுத்ததாக, கவுந்தப்பாடி வாரச்சந்தைக்கு எள் வரத்தாகிறது. சென்றாண்டை விட இந்த ஆண்டு சரியான மழை இல்லாததால் எள் பயிரிடும் விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்யவில்லை. அதனால் எள் வரத்து குறைந்துள்ளது.

ஏற்றுமதி ரகமான வெள்ளை எள் கிலோ, 60 முதல் 65 ரூபாய், கறுப்பு எள், 58 முதல் 60 ரூபாய், சிவப்பு எள், 50 முதல் 55 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வெள்ளை மற்றும் கறுப்பு எள் விலை சென்ற ஆண்டை இந்த ஆண்டு 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கூறுகையில், ""ஆள் பற்றாக்குறை, கூலி உயர்வு, தண்ணீர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைக்கு நடுவே, எள்ளுக்கு கட்டுப்படியாகாத விலைதான் கிடைக்கிறது,'' என்றனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் வாழை நாற்று : நேந்திரம் நாற்றை வழங்க வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2012,01:41 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர்: கூடலூரில் தேசிய தோட்டகலை இயக்கம் சார்பில் மானிய விலையில் வழங்கப்படும் வாழை நாற்றுகளுக்கு பதில் நேந்திரா நாற்றுகள் வழங்க விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கூடலூர் பகுதியில் தேசிய தோட்ட கலை இயக்கம் சார்பில், 50 ஹெக்டர் பரப்பளவில் 100 சதவீதம் மானியத்தில் வாழை நாற்றுகள் வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான பயனாளிகளை கூடலூர் தோட்ட கலை துறையினர் தேர்வு செய்தனர். தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 2,100 வீதம் நாற்றுகள் வழங்க முடிவு செய்யப்பட்டது.

முதல் கட்டமாக, ஜோலார் பேட்டையிலிருந்து "திசு' வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 75 ஆயிரம் "சி-9' வகை வாழை நாற்றுகள் சமீபத்தில் கூடலூர் தோட்ட கலை துறை அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டடு தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.
இது குறித்து கூடலூர் தோட்ட கலை துறை அதிகாரிகள் கூறுகையில்,"" விவசாயிகளை ஊக்கப்படுத்தி பொருளாதார மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகை எடுத்து வருகிறது. அதில் ஒரு பகுதியாக வாழை விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு 49 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வாழை நாற்றுகள் மற்றும் இயற்கை உரங்கள் வழங்கப்படுகிறது," என்றார்.
"கூடலூர் பகுதியில் மற்ற வகை வாழையை விட நேந்திர வாழையே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது; நேந்திர வாழை நாற்றுகளை வழங்க தோட்ட கலை துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என சிறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 27,2012,02:32 IST

கருத்தை பதிவு செய்ய

வருஷநாடு : வேளாண்மை உதவி இயக்குனர் சங்கரன் அறிக்கை: கடமலைக்குண்டு மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் மானாவாரி விவசாயம் அதிகமாக உள்ளது. வேளாண்மை துறை மூலமாக தட்டான்பயிர் 12 சதவீதம், பாசிபயிர் 30 சதவீதம், நுண்ணுயிர் உரமும் மானியத்துடன் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை உதவி அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

---